FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301695

1. District மாவட்டம் : Tiruvallur PS: காவல்நிலையம் Vigilance Anti-Corruption Year: ஆண்டு 2026 FIR No.: முத.அ. எண் Cr.No: 14/AC/2026/TVL Date: நாள் 23/9/2026 at about 16.30 hrs.

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act, 2018. Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: U/s. 7(a) & 12 r/w. 7(a) of
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: the PC (Amendment) Act-2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 22/9/2026 Date to : நாள் வரை 23/9/2026
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் at about 1500 hrs. Time to : நேரம் வரை at about 02.00 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23/9/2026 Time : நேரம் at about 05.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 23/9/2026 Time : நேரம் at about 16.30 hrs.

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் - Typed -

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Tiruvallur Municipality office, about 2kms-North
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி Tiruvallur Municipality office, Tiruvallur.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. T.R. Somasundaram (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 43years. (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Special Tahsildar I/C. District Deputy Inspection cell officer, (g) Address : முகவரி KSWP, Tiruvallur.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Accused- A-1, Tr. N. Dharmaraj, age-49, S/o. Nalarajan, Municipal Commissioner, A-2 Tmt. M. Renuga Devi, age-56, W/o. Munusamy, Field officer, (DD), A-3 Tmt. B. Vanaja, age-34, W/o. Dilli, JA/cashier counter-1 and other 7 others.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
-Nil-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
Un-explained bribe amount of Rs. 48,180/- seized and found G-pay & phone pay transaction of Rs. 11,52,990/- in the officials and contractor's cell phones.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)
Submitted :- On 23/9/2026, at about 05.00hrs, the Tiruvallur District Deputy Inspection cell officer had given a letter along with proceedings, seized attested copy of documents and seized un-explained bribe amount of Rs. 48,180/- and statements of Accused and their explanations for taking necessary action against the officials who were involved in illegal activities for collection of bribe in hand and through G-pay and phone pay. The content of the DDIC officer and his proceedings as follows:-

[FIR Contents continues in separate sheet]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed G.S. Tamizharasi, Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS VACC, Tiruvallur on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

23/9/2026
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: On 24/9/2026 at about 10.00hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் [G.S. TAMIZHARASI] INSPECTOR OF POLICE
Rank: நிலை ..... No. எண் .....

INSPECTOR OF POLICE
VIGILANCE & ANTI CORRUPTION
Thiruvallur - 602 001.

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.14/AC/2026/TVL U/s. 7(a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act -2018 Continuous...)

எதிரிகள் 1 முதல் 10 வரையானவர்கள்:-

எதிரி-1. திரு.என்.தாமோதரன், வயது-49, த/பெ. நடராஜன், நகராட்சி ஆணையாளர், திருவள்ளூர் நகராட்சி அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம்,

எதிரி-2) திருமதி.எம்.ரேணுகாதேவி, வயது-56, க/பெ. முனுசாமி, களப்பணி அலுவலர், (அயல்பணியாக), திருவள்ளூர் நகராட்சி அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம்,

எதிரி-3) திருமதி.B.வனஜா, வயது-34, க/பெ. டில்லி, இளநிலை உதவியாளர்/காசாளர் கவுண்டர்-1, திருவள்ளூர் நகராட்சி அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம்,

எதிரி-4) திரு.N.தமிழரசன், வயது-49, த/பெ. நரசிம்மன், களமேற்பார்வையாளர்/ஓவர்சீர், பொறியியல் பிரிவு, திருவள்ளூர் நகராட்சி அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம்,

எதிரி-5) திரு.வெ.சீனிவாசன், வயது-52, த/பெ. வெங்கடேசன், களமேற்பார்வையாளர்/ஓவர்சீர், பொறியியல் பிரிவு, திருவள்ளூர் நகராட்சி அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம்,

எதிரி-6) திரு.G.ஜெயசீலன், வயது-57, த/பெ. கோவிந்தராஜ், வருவாய் ஆய்வாளர், திருவள்ளூர் நகராட்சி அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம்,

எதிரி-7) திரு.P.வேணுகோபால், வயது-52, த/பெ. பெருமாள், சப்-கான்ட்ராக்டர், எண்.20, மேட்டுத்தெரு, லட்சுமிபுரம், திருவள்ளூர்,

எதிரி-8) திரு.T.சைமன் வயது-37, த/பெ. தமிழ் பாண்டியன், தனியார் ஒப்பந்ததாரர்/சூப்பர்வைசர், எண்.651, V.M.நகர், திருவள்ளூர்,

எதிரி-9) திரு.D.பாலகிருஷ்ணன், வயது-37, த/பெ. தட்சிணாமூர்த்தி, தனியார் மேலாளர், Swasti Healthcare International Company, புதிய எண்.35, சுப்பிரமணிய சுவாமி கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை மற்றும்

எதிரி-10) திரு.K.கார்த்திக், வயது-34, த/பெ. கன்னியப்பன், ஆணையாளரின் தனியார் ஓட்டுநர், திருவள்ளூர் நகராட்சி அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம்.

மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலரின் புகாரின் விவரம் வருமாறு-

அனுப்புநர் திரு.T.R.சோமசுந்தரம், தனி வட்டாட்சியர் (நி.எ.), கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டம், திருவள்ளூர், (பொறுப்பு) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருவள்ளூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திருவள்ளூர். ந.க.எண்.13187/2026/அ3, நாள்.23.09.2026. பொருள்:- திடீர் ஆய்வு - திருவள்ளூர் மாவட்டம் - திருவள்ளூர் நகராட்சி அலுவலகம் - திடீர் இருதரப்பு கூட்டுத்தணிக்கை - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர் குழுவினருடன் மேற்கொண்டது - நடவடிக்கை கோரி கடிதம் சமர்ப்பித்தல் - தொடர்பாக. பார்வை:- மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் (இ) காஞ்சிபுரம் அவர்களுடைய தொலைபேசி செய்தி நாள்.22.09.2026-ன்படி திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.13187/2026/அ3, நாள்.22.09.2026. திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தில் வரும் பொதுமக்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மூலம் நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் கையூட்டாக பணம் பெற்று வருவதாக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் (இ) காஞ்சிபுரம் அவர்களுக்கும், திருவள்ளூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிற்கு கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின்

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.14/AC/2026/TVL U/s. 7(a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act -2018 Continuous...)

அடிப்படையில், கூட்டு தணிக்கை மேற்கொள்வதற்காக அவர்களுடைய தொலைபேசி செய்தி நாள்.22.09.2026 கடிதத்தின்படி திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.13187/2026/அ3, நாள்.22.09.2026-ன்படி திடீர் கூட்டு தணிக்கை ஆய்வு மேற்கொள்வதற்காக திரு.T.R.சோமசுந்தரம், தனிவட்டாட்சியர், கிருஷ்ண குடிநீர் வழங்கல் திட்டம், திருவள்ளூர் ஆகிய என்னை கூட்டு தணிக்கை செய்ய நியமனம் செய்து உத்தரவு கொடுக்கப்பட்டதின்பேரில், 22.09.2026-ந்தேதி மேற்படி அலுவலகத்தில் இருத்துறை திடீர் கூட்டுத்தணிக்கைச் செய்ய நான் மற்றும் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.G.S.தமிழரசி, காவல் ஆய்வாளர் திருமதி.எஸ்.மாலா மற்றும் குழுவினர்கள் இணைந்து இரு துறை திடீர் கூட்டாய்வு மாலை சுமார் 16.00 மணி ஆரம்பிக்கப்பட்டு 23.09.2026-ஆம்தேதி அதிகாலை சுமார் 02.00 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் கூட்டுச்சோதனையின்போது அலுவலகத்தில் உள்ளே இருந்த 1) திருமதி.M.ரேணுகாதேவி, களப்பணி அலுவலர், (அயல்பணி திருவள்ளூர் தாலுக்கா அலுவலகம்) என்பவரிடமிருந்து ரூ.4,500/- பணமும், 2) திருமதி.B.வனஜா, இளநிலை உதவியாளர் என்பவரிடமிருந்து ரூ.4,580/- பணமும், 3)திரு.T.சைமன், வயது.37, த/பெ.தமிழ் பாண்டியன், எண்.651, V.M.நகர், திருவள்ளூர் என்பவரிடமிருந்து ரூ.20,200/- பணமும், 4)திரு.D.பாலகிருஷ்ணன், வயது-37, த/பெ.தட்சணாமூர்த்தி, எண்.8/226, 8வது தெரு, நெய்வேலி, கடலூர் மாவட்டம். Now at எண்.35, சுப்பிரமணி சுவாமி கோவில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை என்பவரிடமிருந்து ரூ.2,000/- பணமும், 5)திரு.P.வேணுகோபால், வயது-52, த/பெ,பெருமாள், எண்.20, மேட்டு தெரு, லட்சுமிபுரம், திருவள்ளூர் என்பவரிடமிருந்து ரூ.10,900/-மும் ஆக மொத்தம் பணம் ரூ.42,180/- (500x80=40,000/-, 200x2=400/-, 100x8=800/-, 50x2=100/-, 20x32=640/-, 10x24=240/-) -ஐ நடவடிக்கை மேற்கொள்ள தங்களிடம் ஒப்படைக்கிறேன். மேலும் செல்போன் மூலமாக Phone-Pay மற்றும் G-Pay-ல் **ரூ,11,52,990/-** பணம் பரிமாற்றம் நடைபெற்ற Account Statement மற்றும் Screen Shot ஆகியவற்றையும், இது தொடர்பாக 1)திரு.T.சைமன், தனிநபர், 2)திரு.P.வேணுகோபால், தனிநபர், 3)திரு.D.பாலகிருஷ்ணன், தனிநபர், 4)திரு.N.தமிழரசன், ஓவர்சீர், 5)திருமதி.M.ரேணுகாதேவி, களப்பணி அலுவலர், 6)திரு.G.ஜெயசீலன், வருவாய் ஆகியோர் அவர்களது விளகத்தினை கைப்பட விளக்கத்தை எழுதிக்கொடுத்ததை நடவடிக்கை மேற்கொள்ள தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒப்பம்XXX **(திரு.T.R.சோமசுந்தரம்)**, தனிவட்டாட்சியர், கிருஷ்ண குடிநீர் வழங்கல் திட்டம், திருவள்ளூர், திருவள்ளூர்/மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்(பொறுப்பு), திருவள்ளூர். இணைப்பு - (1) திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண.13187/2026/அ3, நாள்.22.09.2026. நகல். (2) சோதனையின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.42,180/- (நாற்பத்து இரண்டாயிரத்து நூற்று எண்பது ரூபாய்), (3) செயல்முறை ஆணை அசல். (4) கைப்பட எழுதிக்கொடுத்த விளக்கக்கடிதங்கள் (7), (5) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் (8) மற்றும் (6) செயல்முறையில் குறிப்பிட்டுள்ள அலுவலகத்தின் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களின் சான்றொப்பமிட்ட நகல்கள். **Honourable Madam, I received the above letter, Proceedings and connected documents and seized un-explained bribe amount of Rs.42,180/- (Forty Two Thousands one Hundred and Eighty only) from the Tiruvallur District Deputy Inspection Cell Officer and registered a case on the instruction of DVAC Higher Officers in Tiruvallur V&AC Cr.No. 14/AC/2026/TVL, u/s. 7(a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 23.09.2026 at about 16.30 hrs and took-up investigation. SdXXX (G.S.TAMIZARASI), Inspector of Police, V&AC, Tiruvallur.**

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.14/AC/2026/TVL U/s. 7(a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act -2018 Continuous...)

மேலும், மேற்படி அலுவலரால் பதிவு செய்யப்பட்ட செயல்முறையின் விவரம் வருமாறு. இரு துறை திடீர் கூட்டாய்வு குறித்த செயல்முறைகள். முன்னிலை:- திரு.T.R.சோமசுந்தரம் நாள்:- 22.09.2026. பொருள்:-திடீர் கூட்டாய்வு - திருவள்ளூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு மற்றும் - ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் நகராட்சி அலுவலகம், திருவள்ளூர் - 22.09.2026-ந்தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பான- செயல்முறைகள். ஆணை:- திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தில் வரும் பொதுமக்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மூலம் நகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் கையூட்டாக பணம் பெற்று வருவதாக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் (இ) காஞ்சிபுரம் அவர்களுக்கும், திருவள்ளூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிற்கு கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில், கூட்டு தணிக்கை மேற்கொள்வதற்காக அவர்களுடைய தொலைபேசி செய்தி நாள்.22.09.2026 கடிதத்தின்படி திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.13187/2026/அ3, நாள்.22.09.2026-ன்படி திடீர் கூட்டு தணிக்கை ஆய்வு மேற்கொள்வதற்காக திரு.T.R.சோமசுந்தரம், தனிவட்டாட்சியர், கிருஷ்ண குடிநீர் வழங்கல் திட்டம், திருவள்ளூர் ஆகிய என்னை திடீர் கூட்டு தணிக்கை செய்ய நியமனம் செய்து உத்தரவு கொடுக்கப்பட்டதின்பேரில், இன்று 22.09.2026-ந்தேதி மேற்படி அலுவலகத்தில் இருத்துறை திடீர் கூட்டுத்தணிக்கைச் செய்ய நான் மற்றும் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் ஆய்வாளர்கள் திருமதி.G.S.தமிழரசி மற்றும் திருமதி.S.மாலா மற்றும் குழுவினர்கள் இணைந்து இரு துறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. இன்று 22.09.2026-ந்தேதி மாலை சுமார் 14.30 மணிக்கு திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திலிருந்து அரசு வாகனத்தில் புறப்பட்டு மாலை சுமார் 14.50 மணிக்கு திருவள்ளூர்-பூந்தமல்லி சாலையில் ஜே.என்.சாலையில் அமைந்துள்ள திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்திற்கு அருகில் வந்து வாகனங்கத்தை நிறுத்திவிட்டு இறங்கி நடந்து சென்று, ஆங்காங்கே குழுவினருடன் திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தை கண்காணித்துக்கொண்டிருந்தபோது, மேற்படி திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தில் பொதுமக்கள் உள்ளே சென்று வேலைகளை முடித்து அலுவலகத்திற்கு சென்று வருவதும் போவதுமாக இருந்தார்கள். அப்போது மாலை சுமார் 15.00 மணியளவில் திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்திற்குள்ளே குழுவினருடன் சென்றபோது, அலுவலகத்தின் வெளியே வாராண்டாவில் நின்றுக்கொண்டிருந்த பொதுமக்களையும், சிலர் விஜிலென்ஸ் போலீஸார் என அடையாளம் தெரிந்து வெளியே ஓட முயற்சி செய்தவர்களையும் உள்ளே அழைத்துவந்து, நகராட்சி அலுவலகத்தில் இருந்த நாற்காலிகளில் அமரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. அவர்கள் அனைவரையும் குழுவினர் உதவியுடன் இருக்கையில் அமரசெய்தோம். பின்னர், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் ஆணையர் அறைக்கு சென்று பார்த்தபோது ஆணையர் மதிய சாப்பாடு சாப்பிட்டுவர வெளியே சென்றுள்ளதாக அங்கிருந்த ஆணையர் அவர்களின் அலுவலக உதவியாளர் தெரிவித்தார். பின்னர், அவரது தொலைபேசி எண்ணை வாங்கி, அவருக்கு தகவல் தெரிவித்து உடனே திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்திற்கு வருமாறு தெரிவிக்கப்பட்டது. பின்னர், அலுவலகத்தில் இருந்த பொதுமக்களை ஒரு கேபினின் ஒரு பக்கமாக இருக்குமாறும் தெரிவிக்கப்பட்டது. பின்னர் சுமார் 15.45 மணியளவில் ஆணையர் அவர்கள் நகராட்சி அலுவலகத்திற்கு வந்தவரிடம் என்னை அறிமுகம் செய்துக்கொண்டு, என்னுடன் வந்திருந்த காவல் ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினரை அறிமுகம் செய்து வைத்து அவர்களுடைய அடையாள அட்டைகளை காட்டியும், சுய பரிசோதனை செய்து காட்டியும், மேற்படி அலுவலகத்தை கூட்டுத் தணிக்கை செய்ய வந்திருப்பதாக தெரிவித்து ஒத்துழைப்பு

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.14/AC/2026/TVL U/s. 7(a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act - 2018 Continuous...)

கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.திருவள்ளூர் நகராட்சி ஆணையர் அவர்களைப்பற்றி விசாரிக்க அவர் தன்னுடைய பெயர் N.தாமோதரன், வயது-49, த/பெ. நடராஜன், என்றும், அவர் திருவள்ளூர் நகராட்சியில் ஆணையராக 28.05.2026 முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். தான் அவ்வை சண்முகம் தெரு, திருவள்ளூர் என்ற முகவரியில் குடும்பத்துடன் வசித்துவருவதாகவும், அலுவலகத்தை சோதனை செய்ய ஆட்சேபனை ஏதுமில்லை என தெரிவித்தார். பின்னர் அலுவலகத்தில் வாராண்டாவில் நின்று கொண்டிருந்த பணியாளர்களை விசாரணை செய்தவிவரம் கீழ்க்கண்டவாறு:-

திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தின் தரைத்தளத்தின் நுழைவாயிலின் வலதுப்புறத்தில் இருந்த பொது சுகாதார பிரிவில் இருந்த பணியாளர்களின் விவரம்:-

வ எ	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
	திரு.S.மோகன், துப்புறவு அலுவலர்.	ரூ.1,050/-	தான் கடந்த 2024 ஆண்டு முதல் துப்புறவு அலுவலராக பணிபுரிந்து வருவதாக, அவருக்கு கீழ் ஒரு துப்புறவு ஆய்வர் மற்றும் களப்பணி உதவியாளர் ஒருவரும் உள்ளதாக தெரிவித்தார். இந்த பிரிவில் பணியாளர்கள் வருகை பதிவேடு ஆய்வு செய்தல், ஒதுக்கப்பட்ட வார்டுகளில் பணிகளை உறுதி செய்தல், திடக்கழிவுகளை தரம் பிரித்து வாங்குகிறார்கள் என ஆய்வு செய்தல், பேனர்களை அப்புறப்படுத்துதல் போன்றவற்றை கண்காணித்தல் பணி செய்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது, அவரிடம் ரூ.1,050/- இருந்தது. மாத்திரை வாங்குவதற்காக இப்பணத்தை எடுத்து வந்ததாகவும், அப்பணத்தை பண பதிவேட்டில் பதிவு செய்திருந்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
	திரு.P.விஜய், துப்புறவு ஆய்வர்.	ரூ.150/-	தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் குறித்து பணப்பதிவேட்டில் சரிபார்த்து திருப்பி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
	திருமதி.G.பிரித்திகா, களப்பணி உதவியாளர்.	--	பணம் ஏதுமில்லை.

திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தின் தரைத்தளத்தின் நுழைவாயிலின் இடதுப்புறத்தில் இருந்த வருவாய் பிரிவில் இருந்த பணியாளர்களின் விவரம்:-

வ. எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திரு.P.பாலமுருகன், உதவி வருவாய் அலுவலர்	ரூ.510/-	சொத்துவரி வசூல் மேற்பார்வையிடல், சொத்துவரி விதிப்பு ஆய்வு போன்ற பணிகளை செய்துவருவதாகவும், அவரை சோதனை செய்தபோது, அவரிடம் ரூ.510/- இருந்தது. சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை பண பதிவேட்டில் பதிவு செய்திருந்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.14/AC/2026/TVL U/s. 7(a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act -2018 Continuous...)

வ. எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
2.	திரு.P.பாலமுருகன், உதவி வருவாய் அலுவலர்	ரூ.510/-	சொத்துவரி வசூல் மேற்பார்வையிடல், சொத்துவரி விதிப்பு ஆய்வு போன்ற பணிகளை செய்துவருவதாகவும், அவரை சோதனை செய்தபோது, அவரிடம் ரூ.510/- இருந்தது. சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை பண பதிவேட்டில் பதிவு செய்திருந்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
3.	திரு.ஜெயசீலன், வருவாய் ஆய்வர்,	ரூ.120/-	தான் வீட்டிலிருந்து வரும்போது ரூ.450/- எடுத்து வந்தது. மதியம் சாப்பாடு செலவு போக மீதி ரூ.120/- வைத்திருந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை பண பதிவேட்டில் பதிவு செய்திருந்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
4.	திருமதி.K.கோமதி, வருவாய் உதவியாளர்,	ரூ.20/-	தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
5.	திரு.J.சரவணன், உதவியாளர்.	ரூ.300/-	தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தின் தரைத்தளத்தின் நுழைவாயிலின் இடதுப்புறத்தில் இருந்த நகரமைப்பு பிரிவில் இருந்த பணியாளர்களின் விவரம்:-

வ. எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திருமதி.M.தீப்தி, நகரமைப்பு ஆய்வாளர்	ரூ.400/-	தான் சென்னை பெருங்குடியிலிருந்து வருவதால் செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். மேலும் அப்பணத்தை பண பதிவேட்டில் பதிவு செய்திருந்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
2.	திருமதி.M.ரேணுகாதேவி களப்பணி அலுவலர், (அயல்பணி திருவள்ளூர் தாலுக்கா அலுவலகம்)	ரூ.4,500/-	தான் நகர சர்வேயர் திரு.சரத்குமார் என்பவருக்கு உதவியாக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது. அவரது கருப்பு நிற பர்ஸை சோதனை செய்தபோது, அதில் பணம் ரூ.4,500/- இருந்தது. மேலும், பணம் ரூ.170/- தனியாக இருந்தது. போக்குவரத்து செலவிற்காக ரூ.170/- வைத்திருந்ததாக தெரிவித்தார். எனவே அப்பணத்தை அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் ரூ.4,500/-யை அடகு வைத்த நகையை மீட்பதற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அதற்கான பில் எதுவும் இல்லை என்பதாலும், மேற்படி பணம் குறித்து பணப்பதிவேட்டில் பதிவு இல்லாததால் அதனை லஞ்சப்பணமாக கருதி கைப்பற்றப்பட்டது.

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.14/AC/2026/TVL U/s. 7(a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act -2018 Continuous...)

திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தின் தரைத்தளத்தில் வலதுப்புறத்தில் இருந்த **Cash Section** -ல் இருந்த பணியாளர்களின் விவரம்:-

வ. எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திரு.Y.சாலமன், வருவாய் உதவியாளர் (Cashier) Counter-2	ரூ.300/-	தான் Cash Counter-2-ல் Cashier ஆக கடந்த 4 மாதங்களாக பணிபுரிந்து வருவதாகவும், இன்று தான் வீட்டிலிருந்து வரும்போது, ரூ.500/- பணம் கொண்டு வந்ததாகவும், மதியம் சாப்பாடு செலவு போக மீதி ரூ.300 வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். மேலும் அப்பணத்தை பண பதிவேட்டில் பதிவு செய்திருந்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
2.	திருமதி.B.வனஜா, இளநிலை உதவியாளர்.	ரூ.4,580/-	தான் Cash Counter-1-ல் Cashier ஆக கடந்த ஒரு வருடமாக பணிபுரிந்து வருவதாகவும், இன்று தான் வீட்டிலிருந்து வரும்போது, ரூ.1,000/- பணம் கொண்டு வந்ததாகவும், பல் வலி காரமணாக பல் மருத்துவரை பார்க்க வேண்டி வைத்திருந்ததாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவர் இருந்த Cash Counter இன்றை வசூல் கணக்கீடு செய்யும் மேஜை டிராயரில் தனியாக ரூ.4,580/- பணம் இருந்தது. இப்பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது, பொதுமக்களுக்கு சில்லரை வழங்குவதற்காக தனியாக வைத்திருந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததாலும், பணப்பதிவேட்டில் பதிவு இல்லாததாலும் லஞ்சப்பணமாக கருதி கைப்பற்றப்பட்டது.
3.	செல்வி.C.சிம்போனி, இயநிலை உதவியாளர்	ரூ.75/-	தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். மேலும் அப்பணத்தை பண பதிவேட்டில் பதிவு செய்திருந்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தின் மேல்தளத்தின் இருந்த பொறியியல் பிரிவில் இருந்த பணியாளர்களின் விவரம்:-

வ. எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திரு.S.சத்தியமூர்த்தி, கிளர்க் (உதவியாளர்)	ரூ.260/-	தன்னுடைய சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். மேலும் அப்பணத்தை பண பதிவேட்டில் பதிவு செய்திருந்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
2.	திருமதி.G.யமுனாதேவி, இளநிலை உதவியாளர்	ரூ.110/-	சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை பண பதிவேட்டில் பதிவு செய்திருந்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
3.	திரு.N.தமிழரசன், பணி மேற்பார்வையாளர்	ரூ.1,300/-	போக்குவரத்து செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை பண பதிவேட்டில் பதிவு செய்திருந்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
4.	திரு.K.சோமசுந்தரம், பணி ஆய்வாளர்	--	பணம் ஏதும் வைத்திருக்கவில்லை.
5.	திருமதி.S.தீபிகா, பணி ஆய்வாளர்	--	பணம் ஏதும் வைத்திருக்கவில்லை.

(Contents of the F.I.R in Tiruvallur V&AC, Cr.No.14/AC/2026/TVL U/s. 7(a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act -2018 Continuous...)

திருவள்ளூர் நகராட்சி அலுவலகத்தின் மேல்தளத்தின் இருந்த பொதுப்பிரிவில் இருந்த பணியாளர்களின் விவரம்:-

வ. எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திரு.K.பாபு, கணக்கு அலுவலர்	ரூ.100/-	சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை பண பதிவேட்டில் பதிவு செய்திருந்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
2.	திரு.S.சார்லஸ் ரவிக்குமார், அலுவலக உதவியாளர்.	ரூ.1,300/-	சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை பண பதிவேட்டில் பதிவு செய்திருந்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
3.	திருமதி.A.சிந்து, இளநிலை உதவியாளர்	ரூ.260/-	சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை பண பதிவேட்டில் பதிவு செய்திருந்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
4.	திருமதி.P.பிரியதர்ஷினி இளநிலை உதவியாளர்	ரூ.1,020	சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை பண பதிவேட்டில் பதிவு செய்திருந்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
5.	திருமதி.A.அனிதா தட்டச்சர்	ரூ.260/-	தான் தினக்கூலி அடிப்படையில் தட்டச்சராக பணிபுரிந்து வருவதாகவும், சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
6.	திருமதி.C.தமிழரசி, சமுதாய அமைப்பாளர்	ரூ.285/-	சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அப்பணத்தை பண பதிவேட்டில் பதிவு செய்திருந்தார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நகராட்சி அலுவலகத்தில் இருந்த தனிநபர்கள் விவரம்:-

வ. எண்	பெயர் மற்றும் விலாசம்	வைத்திருந்த பணம்	விளக்கம்
1.	திரு.T.சைமன், வயது.37, த/பெ. தமிழ் பாண்டியன், எண்.651, V.M.நகர், திருவள்ளூர்.	ரூ.20,200/-	தான் பாதாள சாக்கடை பராமரிப்பு பணியை ஒப்பந்த பணி செய்து வருவதாகவும், இன்று தண்ணி உறுஞ்சும் இயந்திரம் பழுதாகி விட்டதால் அதனை எடுத்து வந்து நகராட்சியில் விட்டுவிட்டு, ஓவர்சீருக்கு தகவல் தெரிவிப்பதற்காக அலுவலகத்திற்கு வந்ததாகவும். GRT ஜிவல்லர்ஸ் எதிரே பாதாள சாக்கடை அடைப்பு உள்ளதால், அதனை சரி செய்வதற்காகவும், மோட்டாரை வாடகைக்கு வாங்கி வந்து அடைப்பை சரி செய்வதற்கும் பணம் வைத்திருந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால், அப்பணம் கைப்பற்றப்பட்டது.
2.	திரு.D.பாலகிருஷ்ணன், வயது-37, த/பெ. தட்சணாமூர்த்தி, எண்.8/226, 8வது தெரு, நெய்வேலி, கடலூர் மாவட்டம். Now at எண்.35, கப்பிரமணி சுவாமி கோவில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை.	ரூ.2,000/-	தான் Swasti Health Care Insternational Company-ல் மேனேஜராக பணிபுரிந்து வருவதாக. நகராட்சி அலுவலகத்திற்கு பணிகள் செய்து செலவான தொகைக்கு பில் கொடுக்க வந்ததாகவும், சொந்த செலவிற்காக ரூ.2,000/- வைத்திருந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால், அப்பணம் கைப்பற்றப்பட்டது.

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.14/AC/2026/TVL U/s. 7(a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act -2018 Continuous...)

3.	திரு.P.வேணுகோபால், வயது-52, த/ பெ.பெருமாள் எண்.20, மேட்டு தெரு, லட்சுமிபுரம், திருவள்ளூர்.	ரூ.10,900/-	தான் ஒப்பந்த பணி எடுத்து வேலை செய்து வருவதாகவும், நகராட்சி அலுவலகத்திற்கு பொறியாளரை பார்க்க வந்ததாகவும், கேபிள் ஒயர் வாங்குவதற்காக வைத்திருந்தாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால், அப்பணம் கைப்பற்றப்பட்டது.

மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை விசாரணை செய்து அவர்களுடைய விளக்கத்தினை கைப்பட எழுதிப்பெறப்பட்டது. வருவாய் பிரிவில் இன்றை தினம் 22.09.2026 ஆம்தேதி வருவாய் பிரிவில் உள்ள பில் கவுண்டர் கலெக்சன் தொடர்பான விவரங்கள் கேட்டபோது, இரண்டு கவுண்டர்கள் செயல்பட்டு வருவதாகவும் முதல் கவுண்டரில் திருமதி.வனஜா அவர்கள் பணிபுரிந்து வருவதாகவும், இன்று மொத்தம் 7 பில்கள் போடப்பட்டுள்ளதாகவும், மொத்தம் ரூ.19,827/- வசூலிக்கப்பட்டது என்றும், அதில் பணமாக ரூ.18,577/- வசூல் செய்யப்பட்டதாகவும், ரூ.1,250/- ஆன்-லைன் பேமன்ட் செலுத்தப்பட்டுள்ளதாகவும், அது நேரடியாக நகராட்சி வங்கி கணக்கில் கிரிடிட் ஆகிவிடும் என்றும், அதற்கான பில்கள் விவரம் மற்றும் BRV Abstract print out (2 தாள்கள்) பிரிண்ட் எடுத்து அவரது கையெப்பம் பெறப்பட்டது. மேலும் இரண்டாவது கவுண்டரில் திரு.சாலமன் அவர்கள் பணிபுரிந்து வருவதாகவும். இன்று மொத்தம் 65 பில்கள் போடப்பட்டுள்ளதாகவும், மொத்தம் ரூ.3.52.737/- வசூலிக்கப்பட்டது என்றும், அதில் பணமாக ரூ.1,53,410/- வசூல் செய்யப்பட்டதாகவும், ரூ.1,39,175/- ஆன்-லைன் பேமன்ட் செலுத்தப்பட்டுள்ளதாகவும், அது நேரடியாக நகராட்சி வங்கி கணக்கில் கிரிடிட் ஆகிவிட்டது என்றும், DD ரூ.53,902/- ஆகவும், ECS ரூ.6,250/- ஆக உள்ளது என்றும் தெரிவித்தார். அதற்கான பில்கள் விவரம் மற்றும் BRV Abstract print out (8 தாள்கள்) பிரிண்ட் எடுத்து அவரது கையெப்பம் பெறப்பட்டது. மேற்படி பில்களை சரிபார்த்து மேற்குறிப்பிட்ட தொகைகளை திருப்பி அவரிடமே கொடுத்து முறைப்படி கணக்கில் சேர்க்க அறிவுறுத்தி ஒப்படைக்கப்பட்டது. மேலும், விசாரணைக்காக அலுவலகத்தில் பராமரிக்கப்படும் வருகைப்பதிவேடு 1) பொதுப்பிரிவு (4 தாள்கள்), 2)பொறியியல் பிரிவு (3 தாள்கள்), 3)வருவாய் பிரிவு (3 தாள்கள்), 4)நகரமைப்பு பிரிவு (2தாள்கள்), 6)Out Sourcing பணியாளர்கள் (3 தாள்கள்) ஆகியவற்றின் செப்டம்பர்/2026 மாதத்திற்கான வருகை பதிவேட்டை நகல் எடுத்து கைப்பற்றப்பட்டது. 7) பணியாளர்களின் பணம் கையிருப்பு பதிவேடு (2 தாள்கள்), 8)நகரமைப்பு பிரிவில் பராமரிக்கப்படும் Regularisation Permit Register, Layout Register, Building Plan Permit Register (Input Parameters from Date-01.01.2026 to 22.09.2026) (5 தாள்கள்), 9)Building Plan Approval Module – Abstract (Input Parameters from Date-01.01.2026 to 22.09.2026) (1 தாள்), 10) MIS-All Scheme Abstract Year-2026-27 (3 தாள்கள்), 11)MIS-All Scheme Abstract Year-2025-26 (9 தாள்கள்), 12)Swasti Healthcare International – Tax Invoice (3 தாள்கள்) 13)பொறியியல் பிரிவில் ஓவர்சீராக பணிபுரியும்

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.14/AC/2026/TVL U/s. 7(a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act -2018 Continuous...)

திரு.டில்லிபாபு அவர்களுக்கு ஒப்பந்ததாரர் திரு.டில்லிபாபு அவர்கள் GRT Jewellers-ல் 3.805 கிராம் தங்க மோதிரம் வாங்கி கொடுத்த ரசீது (M.Book No.85-25-26 இருந்து கண்டெடுக்கப்பட்டது), 14) SBM-Animator's பணியாளர்கள் வருகைபதிவேடு (2 தாள்கள்) மேற்படி ஆவணங்களில் ஆணையாளரின் சான்றொப்பம் பெற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்களின் கையொப்பம் மற்றும் இரண்டு காவல் ஆய்வாளர்கள் மற்றும் நானும் கையொப்பம் பெற்று கைப்பற்றினேன். மேலும், பணியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களின் செல்போன்களை சோதனை செய்தபோது, போனில் உள்ள Phone-Pay மற்றும் G-Pay-ல் பண பரிவத்தனைகள் செய்யப்பட்டுள்ளது சம்பந்தமாக சோதனை செய்யப்பட்ட விவரங்கள்:

வ. எண்	செல்போன் உரிமையாளர் பெயர்	செலுத்திய பணம்	செலுத்திய நாள்	விவரம்
1.	திரு.வேணுகோபால், ஒப்பந்ததாரர். (9003388994)	50,000	05.09.2025	ஒப்பந்ததாரர் திரு.வேணுகோபால் அவர்கள் பொறியியல் பிரிவில் பணிபுரியும் ஓவர்சீர் திரு.சீனிவாசன் (8148068295) என்பவருக்கு G-Pay மூலம் அனுப்பிய பணம். அவசர செலவிற்காக பெற்றுக்கொண்டு பின்னர் திருப்பி அனுப்பிவிடுவதாக தெரிவித்தார்.
		50,000	08.09.2025	
		47,000	30.10.2025	
		20,000	10.11.2025	
		50,000	24.11.2025	
		25,000	26.11.2025	
		10,000	22.01.2026	
		50,000	26.01.2026	
		3,000	20.02.2026	
		20,000	22.05.2026	
		30,000	26.05.2026	
		20,000	26.05.2026	
		10,000	03.09.2026	
மொத்தம்		**3,85,000**		
2.	திரு.தமிழரசன், ஓவர்சீர் (8438112212)	10,000	31.12.2025	Walajapet Municipality Technical Assistant திரு.கார்த்திகேயன் (7867097044) மற்றும் ஓவர்சீர் திரு.சீனிவாசன் (8148068295) இருவரும் ஓவர்சீர் திரு.தமிழரசன் அவர்களுக்கு G-Pay மூலம் அனுப்பிய பணம். மேற்படி பணம் கடனாகவும், சீட்டு கட்டுவதற்காகவும் அவரது உறவினர்களுக்காகவும் அனுப்பியதாக தெரிவித்தார்.
		30,000	13.01.2026	
		10,000	16.01.2026	
		30,000	10.02.2026	
		13,000	18.02.2026	
		50,000	02.03.2026	
		48,000	02.03.2026	
		50,000	01.05.2026	
		50,000	01.05.2026	
		11,000	09.05.2026	
		50,000	14.06.2026	
		50,000	14.06.2026	
		50,000	30.06.2026	
		25,000	21.08.2026	
மொத்தம்		**4,77,000**		

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.14/AC/2026/TVL U/s. 7(a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act -2018 Continuous...)

3	திரு.வேணுகோபால், ஒப்பந்ததாரர். (9003388994)	34,000 10,000 3,500	09.02.2026 09.02.2026 09.02.2026	நகராட்சி ஆணையர் திரு.தாமோதரன் (7397382207) அவர்கள் WhatsApp-CUG மூலம் அவர் தெரிவிக்கும் G-Pay எண்களுக்கு ஒப்பந்ததாரர் திரு.வேணுகோபால் பணத்தை அனுப்புகிறார். அதில் திரு.அஸ்வின்குமார், (திருவள்ளூர் மாவட்ட PRO 9962475116) மற்றும் திரு.கோவிந்தராஜ் (7854412939) ஆகியோருக்கு பணம் அனுப்பியுள்ளார், மேற்படி பணத்தை விழா நிகழ்ச்சிகளுக்கு பந்தல் போடவும் மற்ற செலவிற்காகவும் கொடுத்ததாகத்தெரிவித்தார்.
மொத்தம்		**47,500**		
4	திரு.ஜெயசீலன், வருவாய் ஆய்வாளர் (9942523624)	25,000 8,000 5,000 16,901 20,000 8,414 50,000 3,000 4,210 7,965 5,000 3,000 7,000 10,000 15,000 30,000	23.06.2026 04.02.2026 13.03.2026 07.04.2026 16.04.2026 19.05.2026 21.05.2026 23.05.2026 23.05.2026 29.06.2026 03.07.2026 14.08.2026 20.08.2026 24.08.2026 25.08.2026 12.09.2026	பல்வேறு நபர்களிடமிருந்து G-Pay மற்றும் Phone-Pay மூலம் பணம் வந்துள்ள விவரம். மேற்படி பணப்பரிவர்த்தனைகள் அனைத்தும் நகராட்சிக்குட்பட்ட கடைகளின் வரிப்பணம் மற்றும் சொத்துவரிகளை செலுத்த அனுப்பிய பணம் என்று தெரிவித்தார்.
மொத்தம்		**2,18,490**		
5	திரு.தாமோதரன், நகராட்சி ஆணையர், (9841733993)	25,000	02.10.2025	திரு.தாமோதரன், நகராட்சி ஆணையர் அவர்கள் தற்காலிக ஓட்டுநர் திரு.கார்த்திகேயன் அவர்கள் மூலம் பெற்றுள்ளார். மேலும் இப்பணத்தை காஷ்மீர் செல்ல விமான டிக்கெட் புக் செய்ததற்காக கொடுத்ததாக தெரிவித்தார்.

மேற்படி Phone-Pay மற்றும் G-Pay-மூலமாக **ரூ.11,52,990/-** பணம் பரிமாற்றம் நடைபெற்றுள்ளது. மேலும் 1)திருமதி.M.ரேணுகாதேவி, களப்பணி அலுவலர், (அயல்பணி திருவள்ளூர் தாலுக்கா அலுவலகம்) என்பவரிடமிருந்து ரூ.4,500/- பணமும், 2) திருமதி. B.வனஜா, இளநிலை உதவியாளர் என்பவரிடமிருந்து ரூ.4,580/- பணமும், 3)திரு.T.சைமன், வயது.37, த/பெ.தமிழ் பாண்டியன், எண்.651, V.M.நகர், திருவள்ளூர் என்பவரிடமிருந்து ரூ.20,200/- பணமும், 4)திரு.D.பாலகிருஷ்ணன், வயது-37, த/பெ. தட்சணாமூர்த்தி, எண்.8/226, 8வது தெரு, நெய்வேலி, கடலூர் மாவட்டம். Now at எண்.35, சுப்பிரமணி சுவாமி கோவில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை என்பவரிடமிருந்து ரூ.2,000/- பணமும், 5)திரு.P.வேணுகோபால், வயது-52, த/பெ.பெருமாள், எண்.20, மேட்டு தெரு, லட்சுமிபுரம், திருவள்ளூர் என்பவரிடமிருந்து ரூ.10,900/-மும்

(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.14/AC/2026/TVL U/s. 7(a) & 12 r/w. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act -2018 Continuous...)

ஆக மொத்தம் ரூ.42,180/- பணத்தை லஞ்சப்பணமாக கொடுக்க தனிநபர்கள் கொண்டுவந்ததாகவும், அலுவலர்கள் லஞ்சமாக பெற்று வைத்துள்ளதாகவும் முடிவு செய்து கைப்பற்றினேன். மேலும் இந்த அலுவலகத்தில் **"லஞ்சம் வாங்குவம் குற்றம், லஞ்சம் கொடுப்பதும் குற்றம்"** என்ற போர்டு வாசலிலும் உள்ளேயும் வைக்கப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் அனைத்திலும், நகராட்சி ஆணையர், காவல் ஆய்வாளர்கள் மற்றும் நானும் கையொப்பம் செய்தோம் கைப்பற்றினேன். பணம் கைப்பற்றப்பட்ட நபர்கள் மற்றும் ஜி-பே பணப்பரிவர்த்தனை உடையவர்களின் வாக்குமூலங்களை நான் விசாரணை செய்து பதிவு செய்தேன். அதேபோல் அவர்கள் தரப்பு விளக்கத்தை அவர்களாகவே என் முன்னால் எழுதி கையொப்பம் செய்து கொடுத்தனர். மேலும் அலுவலகத்தில் மதிய உணவு சாப்பிட சென்ற அலுவலர்கள் மதியம் 03.30 மணிவரையிலும் ஆஜராகவில்லை. மேலும், ஒப்பந்ததாரர் திரு.வேணுகோபால் அவர்கள் யாருக்கும் எந்த தகவலும் தெரிவிக்காமல் அலுவலகத்தைவிட்டு சென்று செல்போனையும் சுவிட்ச் ஆப் செய்துவிட்டார். எனவே அவரிடம் கையொப்பம் பெறமுடியவில்லை. இச்சோதனையின் போது, பெண்களை பெண் காவலர்கள் கொண்டு சோதனை செய்யப்பட்டது. மேலும் அலுவலகத்திலுள்ள எந்த பொருளுக்கோ, ஆவணங்களுக்கோ பாதிப்பு ஏதுமின்றி அந்தந்த பொருட்களை அந்தந்த இடத்திலேயே வைக்கப்பட்டது. இந்த சோதனைக்கு அலுவலகத்திலிருந்த அலுவலர்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு கொடுத்தனர். மேற்குறிப்பிட்ட திடீர் இருத்துறை கூட்டுத்தணிக்கையை ஒரு திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறையாக விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறையானது, இன்று 22.09.2026-ஆம் தேதி மாலை சுமார் 16.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 23.09.2026-ஆம்தேதி அதிகாலை சுமார் 02.00 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம்XXX 1) திருமதி.G.S.தமிழரசி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பப் பிரிவு, திருவள்ளூர். 2) திருமதி.S.மாலா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பப் பிரிவு, திருவள்ளூர். 3) N.தாமோதரன், த/பெ. நடராஜன், திருவள்ளூர் நகராட்சி ஆணையர், திருவள்ளூர். 4) திரு.S.மோகன், துப்புறவு அலுவலர், சுகாதார பிரிவு, திருவள்ளூர் நகராட்சி அலுவலகம், திருவள்ளூர், 5) திரு.P.பாலமுருகன், உதவி வருவாய் அலுவலர், வருவாய் பிரிவு, திருவள்ளூர் நகராட்சி அலுவலகம், திருவள்ளூர், 6) திரு.K.பாபு, கணக்கு அலுவலர், பொதுப்பிரிவு, திருவள்ளூர் நகராட்சி அலுவலகம், திருவள்ளூர், 7) திரு.T.R.சோமசுந்தரம், தனிவட்டாட்சியர், கிருஷ்ண குடிநீர் வழங்கல் திட்டம், திருவள்ளூர், திருவள்ளூர்/மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்(பொறுப்பு), திருவள்ளூர் மற்றும் T.சைமன், N.தமிழரசன், G.ஜெயசீலன், B.வனஜா, K.கார்த்திக், M.ரேணுகா தேவி. நாள்-23.09.2026.

Honoured Madam,

The original Letter/Complaint, Proceedings, Documents of the Tiruvallur District Deputy Inspection Cell Officer were submitted along with Form-91 before the Hon'ble Judge, Tiruvallur and other copies to the concerned Higher Officers of DVAC on 23.09.2026.

23/9/2026

INSPECTOR OF POLICE
VIGILANCE & ANTI CORRUPTION
Thiruvallur - 602 001.